# திருவள்ளுவரும் திராவிடக் கொள்கையும்

ஆசிரியர்
திருக்குறள் முனிசாமி

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

வெளியிடுவோர் :
செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழ இராசவீதி :: புதுக்கோட்டை

முதற் பதிப்பு
1948 பிப்ரவரி

விலை 2 அணா

அச்சிட்டோர்:
செந்தமிழ்ப் பதிப்பகம்
புதுக்கோட்டை

# பொன்னி வெளியீடுகள்

1. தேய்ந்த விரல் — 0-4-0
   (24 பக்கம் - வெள்ளைத்தாள்)

2 வள்ளுவரும் - பெரியாரும் — 0-8-0
   (48 பக்கம் - வெள்ளைத்தாள்)

3 வடலூரும் ஈரோடும் (அச்சில்)

**மணி திருநாவுக்கரசு முதலியார்:—**

திருக்குறள் ஒன்று கற்றால் ஒருவனுக்குப் போதும். தமிழை அறியலாம்! உலகத்தை அறியலாம்! வாழ்க்கை உண்மையை அறியலாம்! வீடு பேறும் எளிதிலே தானே வரும் இதற்கு உயர் பிறப்பு வேண்டாம் தீக்ஷை வேண்டாம். சமஸ்காரம் வேண்டாம். இடையிலே ஒரு குரு வேண்டாம். ஆ! ஆ! இந்நூலின் பெருமையே பெருமை! இதனைப் பாடிய புலவரே புலவர்! இவரே பெரு நாவலர்! இவரே முதற்புலவர்! திருக்குறளினை அன்றும் யாவரும் போற்றினர். இன்றும் யாவரும் போற்றுகின்றனர் என்றும் யாவரும் போற்றுவர். ஆனால் வேதத்தின் நிலை என்னே! அன்று அதைப் போற்றினார் பலர்! இன்று அதைப் போற்றுவார் சிலர்! நாளை அதனைப் போற்றுவார் இலர்!

திருக்குறளுக்கு ஆயிரம் உரை வந்தாலும் அதன் ஆழத்தை அளவிட்டு உரைத்தல் சாலாது. பரிமேலழகர் உரையிலும் பொருந்தாதன உள. உரையைவிட்டு மூலத்திலேயே எப்பொழுதும் அறிவை நுழைத்துப் பாடுபடல் வேண்டும். இல்லையேல் உண்மை இன்னதென அறிய இயலாது வாழ்க வள்ளுவர்!

# திருவள்ளுவரும் திராவிடக் கொள்கையும்

> ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
> வேந்தனும் வேந்து கெடும் *

## முன்னுரை

இது ஒரு குறிப்பு நூல். திராவிட நாடு இன்று சிதைந்து சீர்கெட்டுத் தவிக்கும் நிலையில், அன்றைய திராவிட நாடு ஆரிய மயக்கத்தில் அகப்படும் தருவாயில் இயற்றப்பட்ட திராவிடப் பெருநூல் — திருக்குறள் — பெரிதும் உதவி புரியும் என்பதை உணரச் செய்வதே இச்சிறு நூலின் குறிக்கோள். இன்று திராவிட நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கும் தமிழ் நூல்கள் அனைத்துமே ஆரியத்தின் அடிப்படையில் மூழ்கியவைகள்தாம் என்று துணிந்து கூறலாம். திராவிடமக்களின் தனிப்பட்ட தன்மதிப்புப் பெருங்கொள்கைகளை எடுத்துரைக்கும் ஒன்றிரண்டு நூல்களும் ஆரியத்தின் வழிப்பட்டவைகளே என்று கூறும் அட்டூழிய மனப்பான்மை இன்று நிலவி வருகிறது. இந்த மதிமயக்கும் கூற்றுக்குத் திருக்குறளையும் இரையாக்கி மகிழும் கூட்டமும் திராவிட நாட்டில் இருந்துதான் வருகிறது.

திருக்குறள் — ஒரு வேதாந்த நூல் — வெறும் நீதி நூல் — பொதுப்படச் சொல்லிக்கொண்டுபோகும் நூல் — என்று ஒரு சிலர் இனியும் சொல்லிக்கொண்டு திரிவார்களானால் அவர்கள் வள்ளுவர் உள்ளத்தை அறியாத — அறிய விரும்பாத — வகையினர் என்றே கூறுவோம்.

---

* உயர்ந்த கொள்கைகளைக் கொண்டுள்ள பெரியார்கள் கோபங்கொள்ளுவார்களாயின், மிகப் பெரிய நாட்டுத் தலைவர்களும் அழிந்துவிடுவார்கள்.

திருககுறள ஒரு எசசரிககை நூல கணடிககும நூல இரணடாயிரம ஆணடுகடகுமுனனரே ஆரியா அடிமைத துத திராவிட மககளின உயாநத கொளகைகளை அடியோடு மாறற முனைநத காலததில, அவவாரியததின மூடககொளகைகளைக கணடிகக எழுநத நூலே திருககுறள ஆகும எனறு முககாலும முழககத தயாராக இருககிறோம

திராவிட மககளின கொளகைகளுககாக எழுநத நூல 'பொதுமறை' ஆவது எஙஙனம எனற சநதேகம உணடாகலாம நியாயமான கேளவிதான. திராவிட மககளின கொளகை உலகில வாழும மககள அனைவாககும பொதுபபடட கொளகையாக அககாலததிலேயே இருநத காரணததாலதான திருககுறளும இனறு பொதுமறையாகத திகழகினறது கடநத முபபது ஆணடு கடகு மேலாகத தனமதிபபு—சுயமரியாதை—பகுததறிவு—எனற அடிபபடையில உழைததுவரும திராவிட இயககததின கொளகைகள வளளுவரின வழி வழி வநத உணமைகளேயாகும எனபதை யாரும மறுககமுடியாது.

## நெருங்குதல

வளளுவரிடததில நெருஙகி அவருடைய எணணஙகளையும கொளகைகளையும அறிநது கொளளுததறகுத தனிபபடடமுறை ஒனறு உணடு அநத வழியில திருககுறளைப பெருமபாலோா இனறைய நாடகளில படிபபதிலலையெனறே கூறலாம. அதறகுக காரணஙகள பல உணடு. ஒனறு மதபபிததது ஏறிய மயககமும மறறொனறு திருககுறளுககு இனறு இருநது வருகிற உரை விளககமும ஆகும.

சாதி, மதம, சமயம, பலதிறபபடட சாமிகள் — எனற இநதக கோளாறுகள தலைவிரிததாடாத காலததில — அதாவது இரணடாயிரம வருடஙகடகு முனனா — திருககுறள எழுதபபடடது. அதறகு

ஆயிரம வருடங்கட்குப் பின்னர், ஆரியத்தின் திருவிளை யாடல்கள் மலிந்து, புராணக் குப்பைகளில் நாடு ஊறிப் போயிருந்த காலத்தில் இருந்த ஒரு ஆரியரால் அதற்கு உரை எழுதப்பட்டது. அந்த உரை இன்றும் படிக்கப் பட்டு வருகிறது. கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்குள்ளாக வே எழுதப்பட்ட, கம்ப ராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் . . இப்படிப் பட்ட மத நூல்களில் படிந்துபோன அறிவையும் உள் ளத்தையும் வைத்துக்கொண்டு திருக்குறளைப் படிப்பவர் கள் அனைவரும் திராவிட மக்களின் உயர்ந்த பொதுக் கொள்கைகளைத் திருக்குறளில் காணமுடியாமல் தவிக் கின்றனர். சிலர் திருவள்ளுவர் நெற்றியில் திருநீற்றுப் பட்டை அடித்துப் புத்தகங்களில் போடுவதையும் இன்று பார்த்துத்தான் வருகிறோம்! அவர்கள் திருவள்ளுவரின் நோக்கத்திற்கு முழுக்க முழுக்கத் தீங்கு இழைப்பவராயத் திகழ்கின்றனர்!

மதத்தை மனதில்வைத்துப் படிப்பவர்கள் வள்ளுவர் உள்ளத்தைக் காண முடியாது. கதைகளையும் புராணங் களையும் கருத்தில் வைத்துப் பார்ப்பவர்களும் அந்தக் சேற்றுக்கே ஆளாவார்கள். வள்ளுவர் ஒரு சீர்திருத்தக் காரர். பகுத்தறிவு வாதி. புரட்சி வீரர். புரட்சி வீரரே!

## நூலினுக்குள்ளே

திருக்குறள் ஆசிரியர் மிகவும் சிக்கனமாகவும் எச் சரிக்கையாகவும் சொற்களைக் கையாண்டிருக்கிறார் என் பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நூலில் மொத்தம் 1330 குறட்பாக்கள் இருக்கின்றன. ( வேண்டு மென்றே சில சொற்களை வள்ளுவர் கையாளாமல் விட்டு விட்டார் என்ற உண்மை பெரிதும் பாராட்டக் கூடியது. காரணம் அப்படிப்பட்ட சொற்கள் ஆரியத்தின் கொள்கைகளைச் சார்ந்தவைகள் என்பதனாலேயேயாகும் உதாரணமாக:—சாதி, மதம், சமயம், வருணம், தருமம், சாத் திரம், கோத்திரம், சாமி, பூதம், கோவில், ஆண்டவன், கடவுள்—

என்ற வார்த்தைகளையே குறட்பாக்களில் காணமுடியாது.*

## திருவள்ளுவரின் எண்ணம்

ஒற்றுமை, சமத்துவம், பகுத்தறிவு என்பவைகளே ஆசிரியரின் அடிப்படையான எண்ணங்களின் முதற்படியாக உள்ளன. இறைவனைப்பற்றிய இன்றைய கொள்கைகளையும் நாட்டில் நடக்கும் மூடப்பழக்க வழக்கங்களையும் கண்முன் நிறுத்திக்கொண்டு திருக்குறளைப் பார்க்கும் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இறைவன்—தூய அறிவு தான் என்பதை ஆசிரியர் ஆணித்தரமாகக் கூறிவிடுகின்றார். "வால் அறிவன்" (தூய அறிவு மயமானவன்) என்று குறிப்பிடுகின்றார். அறிவுடைய யாரும் இதனை அப்படியே ஒப்புக்கொள்ளுவர். இன்றைய திராவிட இயக்கமும் இதனைத்தானே வற்புறுத்தி வருகின்றது. ஆரம்பத்திலேயே, இரண்டாவது குறட்பாவில் இக்கருத்து விளக்கப்பட்டு விட்டது. "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்கிறார் தாயுமானவரும். இன்றைய நாட்டில் நடைபெறும் அட்டூழியங்கள் அனைத்தும் இறைவனைச் சார்ந்தவைகள்—என்று கூறும் மடையர்களைப் பார்த்தால், வள்ளுவர் என்ன கூறுவார்! சிந்தியுங்கள்!

இறைவனுக்கு உருவம் கற்பித்துக் கோடிக்கணக்கில் பணங்களை வாரி இறைத்து — கூத்தடிக்கின்ற கூட்டங்கள் அத்தனையும், வள்ளுவர் கொள்கைப்படி, நாத்திகக் கும்பல்களேயாகும். அவர்கள் இறைவன் என்பதையே உணராதவர்களும் வழிபடாதவர்களுமாவர். இந்த நாத்திகச் சண்டாளர்கள், அறிவுதான் இறைவன்—அன்பும், சமத்துவமும், பேதமற்ற மக்கள் பழக்கமுந்தான்—அந்த அறிவாள இறைவனை வணங்கும் முறை என்று கூறும்

* திருக்குறள் 133 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; அவைகளுக்குத் தலைப்புப் பெயர்கள் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டவைகளேயாகும்.

திராவிட இயக்கத்தை 'நாத்திகம்' பேசுவோர் என்று கூறினால் இந்தக் கோமாளித்தனத்தை எங்குபோய்க் கூறுவது! பேதாபேதத்தை வளர்த்து, எண்ணிறந்த சாதிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கும் கும்பல்களைக் கொண்ட இந்த நாடு உருப்படுமா? எப்படி உருப்படும்? உருப்படவே உருப்படாது என்பதை வள்ளுவர் அன்றே கூறிவிட்டார். "எந்த நாட்டில், சாதிகள்பற்றியும் மதங்கள் பற்றியும், கடவுள்கள்பற்றியும் கூட்டங்கள் இருந்துகொண்டு, அவைகளின் அடிப்படையில் உண்டாகின்ற அரசியலையும், நாட்டாளவனையும் கெடுக்கின்ற ஐந்தாம்படையும், உட்பகையாளர்களும் இருக்கின்றார்களோ அந்நாடு ஒரு காலத்திலும் முன்னேறாது"—

"பல்குழுவும்" பாழ்செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு

ஆசிரியர் இறைவனைப்பற்றிப் பேசுகையில் உலகிற்கு ஆதியாக—முதல் பொருளாக ஒன்று உண்டு, அதுதான் அறிவு என்பதோடு மட்டும் நிறுத்திக்கொண்டு, அந்த இறைவனைப்பற்றி விவரிக்கும் பொழுது ஒப்பற்ற உயர்ந்த நல்ல ஒழுக்கங்களையே அடுக்கிக் காண்பிக்கின்றார். அப்படிக்கன்றி, உலகத்தை உயர்வும் தாழ்வுமாக இறைவன் என்று ஒருவன் படைத்து—ஏழை—அடிமை—வறுமையாளன்—என்று எல்லாம் அவரே நியமித்தார் என்பது முற்றிலும் தவறு. கோளாறான படைப்பினை ஒருவன் படைத்தான் என்றால், அப்படிப் படைத்த அந்த 'உலகம் இயற்றியவனை' அழியட்டும் என்றும் வள்ளுவனார் குறிக்கத் தயங்கவில்லை. "பிச்சை யெடுத்துத் துன்பப்படுத்தான் ஒருவன் வாழவேண்டுமென்று படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன், தானும் அலைந்து திரிந்து கெடக்கடவன்" என்று சாடுகின்றார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றியான்

(இரந்து—யாசித்து)

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIB
MA...

"அந்த நூலில் சொல்லுகிறது. இந்த நூலில் சொல்லுகிறது" — "அந்தப் பெரியவர் சொல்லுகிறார், இந்த மேதாவியே சொல்லிவிட்டார்" — "அதனால் நாம் அப்படியேதான் போகவேண்டும்" என்று முடிவு கட்டுதல் மிகவும் ஆபத்தானது என்கிறார் வள்ளுவனார். இந்தப் பழக்கம் அறிவு வளர்ச்சிக்கு ஒரு பெரிய முட்டுக் கட்டையேயாகும். "சிறந்த அறிஞர்களாயிற்றே, அவர்களிடம் குறையே இருக்காதே" என்று நினைப்பது முற்றிலும் தவறு. இதனை நன்றாக விளக்கிக் காட்டிப் பகுத்தறிவு இயக்கத்தின் உண்மையான வழிகளை வள்ளுவர் மிக எளிதில் விளக்கி விடுகின்றார். "அரிய பல நூல்களை ஒருவர் படித்திருக்கலாம். குற்றம் குறைகளே இல்லாதவர்போலக் காட்சியளித்துக் கொண்டிருக்கலாம். அதனால் அப்படிப்பட்டவர் சொல்லுவதெல்லாம் நேர்மையான மாசற்றவைகள் என்று நினைத்து விடாதே. அந்தப் பெரியவரிடத்திலும் கொஞ்சம் நெருங்கி ஆராய்ந்து பார்த்தால், 'அறியாமை' என்பது அவரிடத்திலும் இருக்கத்தான் செய்யும்"—இந்தப் பொன்னுரைகளைப் பன்முறையும் நாம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

**அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு—**

அரிய கற்று ஆராய்ந்தவர்களிடத்திலும், 'அறியாமை' என்கிற குணம் இல்லாமல் இருக்காது. அறியாமை அவர்களிடத்தும் இருக்கும்.

இப்படியாகப் பகுத்தறிவினை வளர்க்க வேண்டும் என்று ஆசிரியர் தமது நூல் முழுவதிலும் இடித்திடித்து உரைக்கின்றார். ஒருவன் எவ்வளவோ நூல்களைப் படித்திருக்கலாம். ஆனாலும், அவைகளையெல்லாம்விட ஒருவனுடைய அறிவுதான் மேம்பட்டு நிற்கும். 'அறிவு' தான் இறைவன் என்று சொல்லிய வள்ளுவனார், அறிவு

---

வெளிறு—அறியாமை; இன்மை அரிதே—இல்லாமல் இருக்காது.

ஒன்றே கற்ற கல்வியெல்லாவற்றையும்விட மேம்பட்டது என்று கூறுவதும் இயற்கைதான்.

**நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்**
**உண்மை அறிவே மிகும்**

அறிவு உடையவர்களுக்குத்தான் எல்லாம் உண்டு. அவர்களைக்கொண்ட நாடுதான் இன்பம் அடைய முடியும். அறிவினை வளர்ப்பது கல்வியொன்றேதான். கல்வியில்லாமல் அறிவினை வளர்த்தல் எங்ஙனம்? அறிவினை வளர்க்காதவன் 'அறிவான' இறைவனை வழிபட்டவன் ஆகமாட்டான். அவனே மூடப் பழக்க வழக்கங்களுக்குத் தூண் போலாகிறான். அவனால் நாடு அழிந்து மக்கள் வறுமையிலேயே வாடுகிறர். இதற்கு இந்த "இந்திய" தேசமே சான்று. எனவே கடந்த நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்திய மக்கள் பசிக்கும், பட்டினிக்கும், வறுமைக்கும் இன்றைய நாள்வரை கொடுந்துன்பங்களுக்கும் ஆளாகிக்கொண்டிருப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கின்றது! பகுத்தறிவின் மேம்பாட்டினை விளக்கும் குறட்பாக்கள் பலப்பல கூறப்பட்டுள்ளன.*

பொன்னான உண்மைகளை மேற்கூறிய குறட்பாக்கள் எடுத்துரைக்கின்றன. இந்தக் கருத்துக்களைப் பின்பற்றும் மேனாடுகள் இன்று இன்பத்துடன் வாழ்கின்றன. ஆனால் நம் நாடோ, அறிவான இறைவனைத்தொழ, அறிவினை வளர்க்கும் வழி காட்டியான கல்விக் கூடத்திற்குப் பணம் செலவிட அறியாது, முட்டாள்தனமான செயல்களைத்தான் இறைவனைத் தொழும் முறைகள் என்று நம்பிக்கொண்டு—கோடிக்கணக்கில் பணத்தைக் குட்டிச

*"அறிவு உடையார் எல்லாம் உடையார் அறிவு இலார்
என் உடையரேனும் இலர்"

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"—

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"—

சுவராக்கித் திண்டாடிக்கொண்டு இன்றைய 'சாமி பக்தா கள, சாதுக்கள,' என்ற பெயாகளில மறைநது கொண டிருக்கும நாத்திகப பிணடஙகளை வளர்ககினறது!!

## அறமும், அறிவீனமும்

'அறம' எனகிற சொல்லினைக் கையாண்டிருக்கிற ஆசிரியா 'தருமம' எனகிற சொல்லினைக கையாளவே யில்லை யெனபதை உணருதல் வேண்டும. 'அறம' வேறு, தருமம வேறு. 'அறம' எனபதன பொருள 'மனத்தூயமை' எனபதேயாகும. 'தருமம' என்ற வட மொழியின பொருள துணையாக இருபபது (To support) எனபதாகும. இனறைய நாடகளில அறம எனபதறகு நேரான பொருள தருமம என்று வைததுககொணடு தீய ஒழுககமும கெடட சிநதனையுமே குடிகொணடுளள மககள பணத்தை வாரி இறைததுவிடடு இறைவனை யடையும பாதையில் செலலுவதாக நினைகக ஆரமபிதது விட்டனர். பிறரை வஞசிதது ஏமாற்றிக கொளளையடித துப பணம சமபாதிபபவன, கொளளையடிதத பணத்தில் ஆயிரம்ரூபாய கோவிலுககென்று செலவுசெயதுவிட்டால் அவனைப புணணியவான என்று சொலலுகினறனா. இவன வடிகட்டிய முட்டாள--யாதொரு பலனும அடைய வழியில்லாதவன—என்று கூறுகினறது வளளு வனாின தமிழ மறை. காரணம இபபடிபபட்டவனுக்கு மனம தூயமையாக இருகக வேணடும எனபதைபபறறிக் கவலையேயிலலை. அறம எனபதுதான் 'இறைவன என்றும ஆசிரியர் குறிபபிடுகினறார. மனம குறறமில்லா மல்—அழுககிலலாமல்—தீய குணஙகள இல்லாமல் இருபபதுதான அறமாகும.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்

என்கிறா ஆசிரியர். மனந்தூய்மையாக இருககப பழகி விட்டால் போதும. இந்தக குணததினபடி பாாககப போனல் இந்தக் காலத்தில் ஒரு ஆளைககூட நாம இறை

வன வழி நிறபவன என்று கூற முடியாது. திராவிட மக்களின உயாந்த உணமையான பணபினை மறைத்த ஆரியர், மனத தூயமையைபபறறிக் கவலை கொளளாமல ஆடமபர வெளிவேடஙகளைப புரிந்து—கயமைக குணத்தில ஆழநது — பணத்தை நாசமாக்கி — அவவளவும ஆணடவனுககுச செயயபபடுகிறது என்ற பேதைமை எணணத்திறகு ஆளாககும அறிவிலிகளை உண்டாககி விட்டனா. 'மனத தூயமை' ஒனறே போதும என்று கூறிய ஆசிரியா, மறற செயகைகளை எலலாம வெளி வேடஙகள எனறே கூறிவிட்டாா.

**மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன், ஆகுல நீர பிற***

இறைவனைபபற்றிப பேசுமபொழுதும, அந்த அறி வனுக்குப பெயரிட்டு வழங்குமபொழுதும "அறம என கிற கடல் போல இருபபவன" எனகிறாா ஆசிரியா. "அற ஆழி அந்தணன" எனகிற தொடர் இந்த உண மையினைப புலபபடுத்துகினறது. 'அநதணன' எனபது மனம தூயமை எனபதனால அனபும சமத்துவமும கொணடவன்—கருணையெனனும குணத்தான—எனறே பொருள. உண்மையிவவாறு இருகக, தருமம எனகிற சொல்லினைககொணடு இறைவனுககாகப பொருளிரைத துப பொய்யர்களாகும நமநாட்டுப பேயர்களை எனனென பது?

'அறம'எனகிற சொல்லின வழி நிறபதுதான் இறைவன் வழி எனபதை ஆரிய நூல்கள மறைத்து, வெளி வேடஙகளுககு இடமகொடுதத படியால்தான, திராவிட நாட்டிலும வடநாடடிலும இனறு போலிசசாமிகள— பெயா மாறறிககொண்டு திரிகிற—சோமபேறிக கூட்டங கள மலிந்துவிட்டன. இந்தபபடியான போலிசசாமிகள மேனாடுகளில எஙகேனும இருககமுடியுமா? வெளிவேடம போட்டுககொணடு பகதர்கள என்று சொல்லிககொண்டு —மனதில் வஞசனையையும தீய ஒழுககததையுமே வைத்

*ஆகுல நீர பிற—[மனத தூயமையை மட்டும கைககொளளாது] பிற செயகைகளில ஈடுபடுகிறவாகள வெளிவேட ஆடமபரககாராகளேயாவா

துத் திரியும கூட்டஙகளே, அநத நாளிலேயே வளளுவர் வனமையாகக கணடித்துத்தான இருககினறூா.

"மனதில் தீய குணஙகளே வைததுக்கொணடு தண்ணீரில நனருக மூழகி ஆசசாரமாகப பாவனே செயதுகொண்டு உலகினே ஏமாறறும பாவனேப போவழிகள பலா இருககிறூர்கள."

**மனத்தது மாசுஆக மாண்டார் நீர் ஆடி**
**மறைந்து ஒழுகும மாந்தர் பலர்**

இந்த வேடதாரிகளேயும், அவாகளின ஏமாறறுவித்தைகளேயும கணடிதத ஆசிரியா வளளுவஞரைப பினபறறி இனறு திராவிடநாட்டில பகுதத்றிவுஇயககததைப பரபபிவரும பெருமக்களேக குறைகூறும குருட்டு நமபிககைக குமபல்களே எனனெனறு கூறுவது? இநதக குருட்டு நமபிககைககுக காரணம ஆரிய ஆபாசப பழககஙகளேப பினபறறியதே யாகும.

இறைவனே 'அடைவதறகுத் தயார் செயதுகொணடிருக்கிறூம எனறு 'டமாரம' அடிததுக்கொணடு, அதறகாக மொட்டை அடித்துக கொளளுவதும அல்லது சடைமுடிகளே வளாததுக கொளளுவதும முறறிலும தவறூன செயகைகள எனபதைதத திராவிடத் தலேவர் அனறே குறிபபிட்டாா.

**மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்***

அறிஞர்கள தீயவை என்று கூறுகிற செயல்களே ஒழிததுவிட்டால் அதுவே பேரினபத்திறகு வழியாகும. மொட்டையடிததலும, சடைமுடி வளர்த்தலும வேண்டுவே வேணடாம.

இன்று நாட்டில் எனன நடைபெறுகிறது? வளளுவரின இயற்கையோடியைந்த அறவழி பினபறறப

*மழிததல-மொட்டை அடிததல, நீட்டல—சடைமுடி தரிததல.

படுகிறதா? மொட்டையடிக்கும் கூட்டத்திற்குக் கணக்குண்டா? வெளி வேடதாரிகள் மலிந்து பாமரமக்களை ஏய்த்துத் திரிகின்றனர். அந்தோ!

## உயர்வு தாழ்வு

'பிறப்பு ஒக்கும்' என்பதால் மக்கள் எல்லோரும் சமம் என்று கூறி ஒற்றுமைக்கு வழிகாட்டி விட்டார். அந்தோ! அந்த நெறி நாட்டில் பின்பற்றப்படவில்லையே! பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மூடத்தனம் நாட்டில் மலிந்துவிட்டது. ஒருவன் உயர்வுக்கும், தாழ்விற்கும் காரணம் அவரவர்களின் நல்ல—(அல்லது) தீய—குணங்களேயாகும். மேலும், உயர்ந்தவர்—தாழ்ந்தவர் என்ற கருத்தினைக் கூறும்பொழுதெல்லாம் ஆசிரியர், சாதி என்கிற சண்டாள எண்ணத்தை உண்டாக்காமல்—அறிஞர், சான்றோர், என்கிற குலத்தினையே குறிப்பிட்டுச் செல்லுகின்றார். சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவூட்டும் குறட்பாக்கள் உண்மையினை உணர்த்தி விடுகின்றன.*

சமத்துவம்—அன்பு—ஒற்றுமை—பகுத்தறிவு—என்கிற நன்னெறிகளை மேற்கூறிய பொன்னுரைகள் எடுத்து இயம்பி விடுகின்றன.

## மானம்

மக்கள் எல்லோரும் மக்களாக வாழவேண்டும் என்கிற அடிப்படையில் இருந்துவரும் திராவிட நாட்டின

*"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான

பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழ் அல்லவர்

தலையான குணம் மானம் என்பது ஆகும். மானத்தை விட்டு, உயிரைக் காப்பாற்று என்பது ஆரிய வேதம். உயிரைவிட்டு மானத்தைக் காப்பாற்று என்பது திராவிடர்களின்—திருவள்ளுவரின்—ஒப்புயர்வற்ற கொள்கை. மக்களுக்குள்ளே சமத்துவம் இல்லாமல் — ஒருவனை யொருவன் பிறப்பினால் தாழ்த்திக் கூறிக்கொண்டு இருக்கும் நாட்டில் அந்தக் கேவல மனப்பான்மையினை, மாற்றியே தீரவேண்டும். மானத்திற்குப் பங்கம் விளைவிக்கும்படி நடந்துகொண்டு— தன்னுடன் பிறமக்களை 'ஒட்ட' விடாமல் நடந்து கொள்ளுபவனை 'உனது பகைவன்' என்றே எண்ணிக்கொள் என்கிறார் ஆசிரியர். அந்தப் பாதகனின் திமிர்பிடித்த எண்ணத்தினை மாற்றக் கச்சை கட்டிக்கொண்டு நிற்பாயாக. அவனோடு சேர்ந்து பழகாதே. உன்னைத் தாழ்த்திப் பேசும்—அந்தப் பகைவனுடன் மானத்தையும் விட்டுச் சேர்ந்து பழகுவதைவிட இறந்துபோவதே மேல் என்கிறார் ஆசிரியர்.

**ஒட்டார்பின் சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப் படுதல் நன்று**

கல்வி கேள்விகளில் சிறந்து ஆராய்ச்சி அனுபவங்களில் மிகுந்து, நுட்பமான அரம்போல் கூர்மையான அறிவும் படைத்தவனாக இருந்தாலும், மக்களை மக்களாக மதித்து—சமத்துவமாக நடந்து கொள்ளாதவனாக இருப்பானானால் அவனை ஒருமரம் என்றே கூறுதல் வேண்டும்.

**அரம் போலும் கூர்மையரேனும் 'மரம்'போல்வர்**
**மக்கள் பண்பு இல்லாதவர்.**

மக்களை மக்களாக மதித்துப் பழகும் முறையில்லாத நாட்டில் இறைவன் வழிபாடு இருக்க முடியாது. ஒழுக்கம் ஒன்றே 'இறைவன்' என்ற உண்மையினைக் குறித்துணர்த்திய உயர் கொள்கையினை இன்றைய பகுத்தறிவு இயக்கம் ஒன்றுதான் எடுத்துரைக்கின்றது என்பதை யாரே மறுத்தல் கூடும்? அறிவே இறைவன—அன்பே நெறி— என்ற எந்தை வள்ளுவனார் நெறியினைப் பின்பற்றித் திராவிடப் பெருமக்கள் மானத்தோடு வாழ்வார்களாக!

மறைமலையடிகள்
MARAI